# GST ROAD NEWS

## CHROMPET

Email:gstroadnews@gmail.com
Weekly News Paper
www.gstroadnews.com
Chromepet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar
Vol:13 Issue -17 03 Aug 2025 - 09 Aug 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902


**LAPTOPS & COMPUTERS**
SALES | SERVICES | ACCESSORIES



ஐசர்விஸ்
iService
DOOR STEP SERVICE
MONDAY to SUNDAY
10 AM TO 6 PM
No3.PADMANABHA STREET, NEHRU NAGAR, CHROMEPET
99401 60664, 94444 39494

**CMDA*DTCP*RERA APPROVED**
**VILLA PLOTS FOR SALE**
TAMBARAM
GUDUVANCHERRY
POTHERI
SINGAPERUMAL KOIL
CHENGLEPET
AVADI
POONAMALLEE
REDHILLS
OMR & ECR
7200 91 92 93

## திடீர் ஏற்றத்தில் தங்கம் விலை



சென்னையில் ஒரு சவரன், ரூ. 73,200க்கு விற்பனை செய்யப்பட்ட தங்கம் நேற்று ரூ. 1,120 அதிகரித்து ரூ. 74,320க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**WANTED**
**MARKETING ENGINEERS**
With Fluency in English
B.E. (Inst./ Mech)
Fresh / Experience (AgeBelow 50)
Walkin:
PLACKA INSTRUMENTS INDIA PVT LTD
NO:5, RAMAMOORTHY STREET, NEHRU NAGAR
CHROMEPET, CHENNAI -600044.
sales@plackainstruments.com
plackainstruments@yahoo.com
044-22231559, 22234562

**LAND FOR SALE @ AGARAM THEN**
Nr. AGARAM BUS STAND & HP PETROL BUNK



1800 Sqft 30 FT ROAD NORTH FACING
1400 Sqft 24 FT ROAD WEST FACING
98409 84126

**FLATS FOR SALE**
@HASTHINAPURAM, VENKATRAMAN NAGAR 4th MAIN ROAD
Premium Flats
3BHK 1290 Sqft
➤ As Per Vaasthu ➤ Lift
➤ CCTV Camera ➤ CCP




VILLA PLOTS FOR SALE@ PADAPPAI RERA& DTCP APPROVED
P.S. FOUNDATIONS 98401 55139 95973 83526

**3BHK INDIVIDUAL VILLA SALE**
@ CHROMEPET, HASTHINAPURAM



Nr. SHIKSHAA PUBLIC CBSE SCHOOL
JUST 500 METER FROM HASTHINAPURAM BUS STAND
LAND AREA 1247 Sqft
BUILT UP 1900 Sqft
- 3 BEDROOM, 3 BATHROOM,
- INDIVIDUAL WATER TANK,
- COMPOUND WALL,BORE WATER,
- 3 PHASE EB, U.G.D. RED BRICKS...
MAJESTIC FOUNDATION
98841 31132 / 96000 25369

**3 BHK INDEPENDENT DUPLEX HOUSE**
FOR SALE@ CHROMPET
Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School
3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged



MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004

**FLATS FOR SALE**
@ CHROMPET RADHA NAGAR
JESUPATHAM STREET, Nr.RAILWAY GATE
READY TO OCCUPY
2BHK - 856 Sqft
3 UNITS ONLY
ONLY ONE UNIT PER FLOOR
☑ LIFT ☑ CCP ☑ AS PER VAASTHU



99625 72709 / 94440 20442

**FLATS FOR SALE @CHROMPET**
RADHANAGAR GANAPATHIPURAM
JUST 200 ft RADIAL ROAD




3-BHK 1124 Sqft
2-BHK 868 Sqft
Lift/CCP/CCTV
AS PER VASTHU / 24 HRS WATER
PerSqft. ₹ 6699
JEEVA REKHA BUILDERS
78457 64414/ 88255 43215

**VILLAMENT FOR SALE**
@CHROMPET, BHARATHIPURAM
VICTORIA CREST



INDEPENDENT FLOOR
3 BHK
1300 Sqft
- CCP
- LIFT UPTO TERRACE
- CCTV FACILITIES IN COMMON AREA
NEARING COMPLETION HAND OVER SEPTEMBER 2025
M/s. RAKSHIT CONSTRUCTIONS
No. 47, VETERAN LINES, PALLAVARAM, CH-43
94440 05533

**INDIVIDUAL VILLA FOR SALE@ CHROMPET**
THIRUMALAI NAGAR, Nr.Ponniyamman kovil
MAYILAI RAMAMURTHY STREET
3 BHK
LAND AREA 1200sqft
BUILD UP AREA 1900sqft



☑ 24 Hrs Water ☑ As Per Vasthu ☑ 100% Red Bricks
GJ CONSTRUCTION
98409 41585

**PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET**

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*



4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

KRISHNA NAGAR
Nr. HASTHINAPURAM BUS STAND



24 HRS POWER BACKUP*
3 BHK - 1287 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects
24 HRS POWER BACKUP*



3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD, HDFC BANK, SBI

# பாவங்கள் போக்கும் வரலட்சுமி நோன்பு

பெண்களுக்கே உரித்தான கருணை உள்ளமும், பொறுமையை கொண்ட லட்சுமிதேவி, செல்வத்துக்கு அதிபதியாக இருந்து, தன்னை வழிபடுபவர்களுக்கு செல்வங்களை வாரி வழங்குகிறார்.

லட்சுமிதேவியை விரதம் இருந்து வழிபடுவதால், அஷ்டலட்சுமிகளின் அருள் கிடைக்கும். மாங்கல்ய பாக்கியம் பெறலாம். திருமணத் தடை விலகி, பெண்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். சுமங்கலி பெண்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் வாழவும், கணவருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும், குழந்தைகள் நலமுடன் வாழ வேண்டியும், லட்சுமிதேவியை நினைத்து வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

முன் காலத்தில் சாருமதி என்றபெண்,தன்கணவனையும், மாமனார், மாமியாரையும் கடவுளர்களாகவே நினைத்து பணிவிடை களைச் செய்து வந்தாள். அவளின் அன்பு மிகுந்த மனதைக் கண்டு, மகாலட்சுமி தேவி மகிழ்ச்சி கொண்டாள். ஒரு நாள் சாருமதியின் கனவில் தோன்றிய லட்சுமிதேவி, 'என்னைத் துதித்து வரலட்சுமி விரதம் மேற்கொள்பவர்களின் இல்லத்தில் நான் வசிப்பேன்' என்று கூறியதுடன், அந்த விரதத்தை கடைப் பிடிக்கும் வழிமுறைகளையும் சாருமதிக்கு எடுத்துரைத்தார். அதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் சிறப்பு மிகுந்த பணியையும் அவளிடம் லட்சுமிதேவி ஒப்படைத்தாள்.

சாருமதியும், தேவியின் எண்ணப்படியே அனைத்தையும் செய்து முடித்தாள். சாருமதி 'வரலட்சுமி விரதம்' இருந்து பல நன்மை களைப் பெற்றாள். அதைக் கண்ட மற்ற பெண்களும் அந்த விரதத்தை கடைப் பிடிக்கத் தொடங்கினர். அதன் காரணமாக அந்த நாடே சுபீட்சம் அடைந்தது என்று புராணங்கள் தெரிவிக்கின்றன.

விரதம் இருக்கும் முறை :

ஆடி அல்லது ஆவணி மாத பவுர்ணமிக்கு முன்னதாக வரும் வெள்ளிக் கிழமை அன்று, வரலட்சுமி விரதத்தை மேற்கொள்ள வேண்டும். அதற்கு முதல்



நாளே வீட்டை சுத்தம் செய்து, பூஜை அறையை மெழுகி, கோலமிட வேண்டும். வீட்டின் தென்கிழக்கு மூலையில் ஒரு சிறிய மண்டபம் அமைத்து அலங்கரிக்க வேண்டும். மண்டபத்தின் இரு பக்கங்களிலும் வாழை மரக்கன்று கட்டி, பூக்களால் தோரணம் கட்ட வேண்டும். அதில் தங்கம், வெள்ளி அல்லது சந்தனத்தால் செய்யப்பட்ட வரலட்சுமி தேவியின் படத்தை வைக்க வேண்டும்.

லட்சுமிதேவியின் முன்பாக ஒரு வாழை இலை போட்டு, அதில் பச்சரிசியை பரப்ப வேண்டும். அரிசியின் மீது தேங்காய், மாவிலை, எலுமிச்சை மற்றும் பழங்கள் வைக்க வேண்டும். லட்சுமிக்கு மஞ்சள் ஆடை அணிவிக்க வேண்டும். ஒரு கலசத்தில் மஞ்சள் கயிறு கட்டி, அதன் மேல் தேங்காய் வைக்க வேண்டும். தேங்காயிலும், கலசத்திலும் குங்குமம் இட வேண்டும். பின்னர் கலசத்தை அரிசியின் நடுவில் வைக்க வேண்டும்.

தொடர்ந்து முதலில் விநாயகர் பூஜை செய்ய வேண்டும். பின்னர் லட்சுமியை அர்ச்சித்து, தூப தீபங்கள் காட்ட வேண்டும். அன்னம், பாயசம், பழ வகைகள் நிவேதனம் செய்ய வேண்டும். பின்னர் வரலட்சுமியின் முன் வைத்திருந்த நோன்புச்சரட்டை மஞ்சள், குங்குமம் இட்ட மலர்களோடு சேர்த்து கழுத்தில் கட்டிக் கொள்ள வேண்டும். பூஜையின் போது அஷ்ட லட்சுமி ஸ்தோத்திரம், கனகதாரா ஸ்தோத்திரம், மகா லட்சுமி ஸ்தோத்திரம் ஆகியவற்றை படிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால், திருமணமான பெண்களின் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கும். செல்வம் சேரும். கன்னிப்பெண்களுக்கு திருமணம் கைகூடும். குழந்தைகளுக்கு கல்வி ஞானம் கிட்டும். அம்பிகையின் அருளால் விரும்பிய நலன்கள் வாழ்வில் கிடைக்கப்பெறும் என்பது ஐதீகம்.

# ஆடித்தபசு என்றால் என்ன ? அம்மன் ஊசி முனையில் தவம் செய்த கதை தெரியுமா ?

ஆடி மாதத்தில் வரும் மிகச் சிறப்பான, மிக முக்கியமான விழாக்களில் ஒன்று ஆடித் தபசு. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோவிலில் ஆடித்தபசு விழா ஆண்டு தோறும் வெகு விமர்சையாக தேரோட்டத்துடன் கொண்டாடப்படும். இதற்கு காரணம் ஆடித்தபசு விழா உருவானதே சங்கரன் கோவில் தலத்தை வைத்து தான். ஆடித்தபசு என்றால் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்குமுதலில் சங்கரன்கோவில் திருத்தலத்தின் வரலாற்றை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆடித்தபசு வரலாறு :

சங்கன், பதுமன் என்ற இரண்டு நாக வம்சத்தை சேர்ந்த அரசர்கள் இருந்தார்கள். இவர்களில் சங்கன் என்பவர் சிவ பெருமானையும், பதுமன் என்பவர் பெருமாளையும் வழிபட்டு வந்தனர். இவர்கள் இருவருக்கும் இடையே தான் வணங்கும் கடவுள் தான் பெரியவர் என்ற வாக்குவாதம் வரும். நாளடைவில் இது பெரிய பிரச்சனையாக மாறியது. இதனால் இதற்கு தீர்வு காண்பதற்காக அன்னை பராசக்தியிடம் இருவரும் சென்றனர். சிவன்



விஷ்ணு இருவரில் யார் பெரியவர் என தங்களின் சந்தேகத்தை கேட்டனர். இதைக் கேட்ட அன்னை, இருவரும் ஒன்று தான் என்றார். இதை எப்படி தாங்கள் ஏற்றுக் கொள்வது என அவர்கள் பார்வதியிடமே கேட்டனர். அதற்கு உரிய காலம் வரும் என பதிலளித்து அவர்களை அனுப்பி வைத்தாள் அம்பிகை.

சிவனிடம் அம்மன் கேட்ட வரம்

பிறகு சிவ பெருமானிடம் சென்ற அம்பிகை, "நாக அரசர்கள் மட்டுமின்றி அனைவருக்கும் ஹரியும், ஹரனும் ஒன்று தான் என்பதை உணர்த்த இருவரும் சேர்ந்து காட்சி தர வேண்டும்" என கேட்டுக் கொண்டார். ஆனால் சிவ பெருமானோ, "அது அவ்வளவு எளிதானதல்ல.ஒரு பெரிய விஷயம் நடைபெற வேண்டும் என்றால் அதற்கு பெரிய தவம் செய்திருக்க வேண்டுமே" என்றார். இந்த சிறப்பான விஷயம் நடைபெறுவதற்காக தானே உலக நன்மைக்காக தவம் செய்வதாக பார்வதி தெரிவித்தார். இதனை ஏற்ற சிவ பெருமான், "முனிவர்கள் பலர் புன்னை மரங்கள் நிறைந்த வனத்தில் என்னை நோக்கி தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து நீயும் தவம் செய். உரிய காலம் வரும் போது நாங்கள் உனக்கு காட்சி தருவோம்" என்றார்.

ஊசி முனையில் தவம் இருந்த அம்மன் :அம்பிகை தவக்கோலத் துடன் புறப்பட்ட போது தேவ லோக பெண்கள், பணிப் பெண்கள் என அனைவரும் அன்னையுடன் தாங்களும் வருவதாக கூறி, பசுக்களின் வடிவில் கூட்டமாக அன்னை யுடன் புன்னை மர வனத்திற்கு வந்தனர். அங்கு ஊசி முனையின் மீது, ஒற்றைக் காலில் நின்று, அம்பிகை கடும் தவம் புரிந்தாள். தேவர்கள், முனிவர்கள், அம்பிகை ஆகியோரின் தவத்திற்கு மகிழ்ந்து, ஒரு பாதி சங்கரனாக வும், மறு பாதி நாராயணராக வும் இணைந்த வடிவமாக சங்கர நாராயணராக இறைவன் காட்சி தந்த திரு நாள் தான் ஆடித்தபசு திரு விழாவாக கொண்டாடப் படுகிறது.

கோமதி அம்மனின் திருக்காட்சி

கோவாகிய பசுக்கூட்டத் துடன், மதி போன்ற அழகிய முகத்துடன் வந்து தவம் செய்ததால் இந்த அம்பிகைக்கு கோமதி அம்மன் என்றும், ஆவுடை நாயகி என்றும் பெயர்.

கோமதி என்ற சொல்லுக்கு, பசுக் கூடத்துடன் வந்து, மதியாகிய ஞான நுட்பத்தால் ஊசி முனையில் நின்று தவம் செய்த அன்னையின் வைராக்கியத்தை குறிப்ப தாகவும் அர்த்தம். சங்கரன் கோவில் சிவ தலமாக இருந்தாலும் இங்கு பிரதான தெய்வமாக கோமதி அன்னையே அருள் புரிகிறாள். ஆடித்தபசு அன்று மஞ்சள் ஆடையில் தவக் கோலத்தில் கோமதி அம்மன் காட்சி தரும் வைபவமும், சங்கர நாராயணர் திருக் காட்சி அளித்த வைபவமும் நடைபெறும். ஆடித்தபசு அன்று கோமதி அம்மனை வழிபடுபவர்களுக்கு அனைத்து நலன்களும் கிடைத்திடும் என்பது ஐதீகம். ஆடித்தபசு அன்று அம்மனை வழிபட்டால் திருமண வரம் கூடி வரும் என்பத நம்பிக்கை. அதோடு மங்கலகரமான வாழ்க்கை அமையும். வேண்டிய வரங்கள் கிடைக்கும்.

# ஆடி பௌர்ணமி வழிபாடுகளும் சிறப்பு பலன்களும் !!

ஆடி பௌர்ணமியன்று சிவபெருமானுக்கு திரட்டுப் பால் அபிஷேகம் செய்து, கருப்பு பட்டாடை, நூறு முத்துக்கள் கோர்த்த மணி மாலை, கருஊமத்தம் பூமாலை அணிவித்து, மூங்கில் அரிசி பாயாசம் படைத்து வழிபட்டால் எப்பேர்ப்பட்ட பகையும் விலகும்.ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று விரதம் இருந்து விளக்கேற்றி வழிபடுவதால் நற்பலன்களை அடைய முடியும். ஆடி மாத பௌர்ணமியில் விளக்கேற்றினால் வளமும் நலமும் பெறலாம். பௌர்ணமி விரதம்: பௌர்ணமியில் பொதுவாக அம்மன் வழிபாடு மேற் கொள்ளப்படுகிறது. அம்மன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன. அம்மன் கோவில்களில் விளக்கு பூஜை, அன்னதானம் ஆகியவை நடைபெறுகின்றன.

பௌர்ணமி அன்று விரதமுறை மேற்கொள்ளப் படுகிறது. பகல் முழுவதும் உணவு உண்ணாமல் விரதமுறை மேற்கொள்கின்றனர். மாலையில் கோவில்களில் அல்லது வீட்டில் வழிபாடு மேற்கொண்டு உணவு உண்டு விரதத்தை நிறைவு செய்கின்றனர். வழிபாட்டின்போது அம்மன் குறித்த பாடல்கள் பாராயணம் செய்யப்படுகிறது.

ஆடி பௌர்ணமி அன்று திருமாலை வழிபாடு செய்வது சிறப்பாகும்.

# மாலை வேளையில் சாப்பிட ஏற்ற... சத்தான... பால்கொழுக்கட்டை



தேவையானபொருட்கள்: அரிசிமாவு 1 கப், உப்பு 1/2 டீஸ்பூன், நெய் 1 டீஸ்பூன், சுடுநீர் 1 கப், பால் 3 கப், தண்ணீர் 1 கப், சர்க்கரை 3/4 கப், தேங்காய்பால் 1 கப், ஏலக்காய்பொடி 1 டீஸ்பூன் செய்முறை: முதலில் ஒரு பௌலில் அரிசிமாவை எடுத்து, உப்பு மற்றும் நெய் சேர்த்துக் கொள்ள வேண்டும். பின் அதில் சுடுநீரை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி ஸ்பூன் பயன்படுத்தி கிளறி, 5 நிமிடம் ஊற வைத்து, பின் கைகளால் மாவை நன்கு மென்மையாக பிசைய வேண்டும். பின்பு கையில் நெய்யைத் தடவி, பிசைந்து வைத்துள்ள மாவை சிறு உருண்டைகளாக உருட்டி ஒருதட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.பிறகு ஒரு பாத்திரத்தில் பால் மற்றும் நீரை ஊற்றி அடுப்பில் வைத்து, நன்கு கொதிக்க வைக்க வேண்டும். பின் அதில் உருட்டி வைத்துள்ள உருண்டைகளைப் போட்டு 10 நிமிடம் கிளறி விட்டு வேக வைக்க வேண்டும். பாலானது சுண்டி, கொழுக்கட்டை வெந்ததும், சர்க்கரையை சேர்த்து கிளறி, 5 நிமிடம் கொதிக்க வைக்க வேண்டும். அடுத்து அதில் தேங்காய்பாலை ஊற்றி, ஏலக்காய் பொடியைத் தூவி கிளறி இறக்கினால், சுவையான பால் கொழுக்கட்டை தயார்.

# CLASSiFiEDS

## RENTAL


FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2BHK
PURE VEG
8072230451

COMMERCIAL
SPACE FOR RENT
@ CHROMPET NEW COLONY
1ST FLOOR 1707 Sqft
CORNER PROPERTY ,LIFT @ CCP
READY TO OCCUPY
9444013454


## INDEPENDENT HOUSE


IND. HOUSE FOR SALE
@ PERUNGALATHUR
LAND AREA - 1440 Sqft
BUILT UP AREA - 1290 Sqft
80722 30451

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 300/- (Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999


DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.


HOME TUITION
UNDERTAKEN
@CHROMEPET
CBSE MATRIC
UP TO
10TH STANDARD
81489 18636
63801 02408





## NETLON


SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street, Hasthinapuram, Chennai - 600 064.






PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731


## APARTMENT SALE


APARTMENT FOR SALE
@ CHROMEPET
Nr. MITbridge, Patel road
1546 Sqft
VEG only
9940610277


## FLAT RESALE


FLAT FOR RESALE
@PORUR
2&3 BHK
FLATS AVAILABLE
WITH CCP
80722 30451

FLAT FOR RESALE
@ CHROMPET PATEL ROAD
2 BHK, 950 SQ. FT,
UDS 507 SQ.FT,
1ST FLOOR, LIFT,
COVERED CAR PARK,CCTV,
LIFT, 2 BORE, 1WELL MOTOR,
1SUMP MOTOR, 5 YRS OLD
98415 15595

FLAT FOR RESALE
@CHROMPET
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS -412 Sqft 1st FLOOR
@KRISHNA NAGAR
1182 Sqft 484 Sqft 1st FLOOR
80722 30451


### ரஷ்யா நோக்கி 2 அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்கள் - டிரம்ப்

2 அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை ரஷ்யாவை நோக்கி நிலைநிறுத்த உத்தர விட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு.

ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வெடேவின் கருத்துக்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கை என டிரம்ப் விளக்கம்.


SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

YK HERBAL PRODUCTS
முல்தானிமெட்டி சோப்பு
கஸ்தூரி மஞ்சள் சோப்பு
குப்பைமேனி சோப்பு, நிலக்கரி சோப்பு
வேப்பிலை சோப்பு, ஆட்டுபால் சோப்பு
ரெட் வொயின் சோப்பு
இயற்கை முறையில் குளியல் சோப் கிடைக்கும்
COURIER AVAILABLE
7305405918


## BUYING / SELLING


BUYING / SPOT CASH
WORKING AND NOT WORKING
A/C, BRASS,STAINLESS STELL, FRIDGE, OLD COMPUTER, LAPTOP, UPS, BATTERIES, MUSIC SYSTEM, WATER HEATER, GYM ITEMS, WOODEN FURNITURE, SOFA SET, COT, BEURO, DINING SET, DRESSING & OFFICE TABLE, OLD ALUMINIUM
ALL A TO Z SCRAPS
SRIRAM TRADERS
94441 33979

# WE'RE HIRING

MALABAR GOLD & DIAMONDS
CELEBRATE THE BEAUTY OF LIFE

JOB LOCATION: CHROMEPET

- **Showroom Manager** (Male)
  MBA/ Degree with 4-5 years of experience in reputed retail jewellery management as Showroom Manager. Age below 45.
- **Assistant Manager Marketing** (Male)
  MBA/ Degree with minimum 5 to 6 years of experience in Retail Marketing. Should be well-versed in BTL & ATL activities. Age below 35.
- **Assistant Sales Manager** (Male/ Female)
  Degree/ Plus Two/ Diploma (Hospitality) with minimum 3 years of experience as Assistant Manager handling Gold / Diamonds/ Precious Stones in any reputed retail jewellery. Age below 35.
- **Showroom Sales Executive** (Male/ Female)
  Graduation/ Plus Two/ Diploma (Hospitality/ Technical) with 2-3 years of experience in jewellery (Gold, Diamonds, Silver, Precious Stones). Freshers can also apply. Age between 21- 35.
- **Guest Relations Executive** (Female)
  Graduation/ Plus Two/ Diploma (Hospitality / Technical) with professional acumen, pleasant behaviour, expertise in Customer Relations & excellent communication skills. Age between 21-30.
- **Business Development Executive** (Male)
  Graduation/ Plus two with a minimum of 2-3 years of experience in Marketing. Must have a two-wheeler with a valid license. Freshers can also apply. Age between 21-35.
- **Cook**
  Experienced Cook/ Assistant Cook (South Indian). Should have hands-on experience in cooking for large pax.
- **Driver**
  Experienced 4-wheeler Driver with a valid Driving License.
- **Electrician**
  Diploma/ B.E/ ITI with solid experience as an Electrician. Age below 35.

evinraji.john@malabargroup.com 9895997916, 7736083916, 8089031916

Date: **05th August, 2025 (Tuesday)** | Time: **10:00 AM to 3:00 PM**

Venue of the Interview: **Adyar Anandha Bhavan - A2B, 367, Chennai - Theni Highway, Kothandam Nagar, Chromepet, Chennai - 600 017**

Register at **https://careers.malabargroup.com/Account/Register**

**For more details: No 1, 2nd Floor, Shiva Building, Krishna Street, North Usman Road, T. Nagar, Chennai - 17. Tel: 044 28140146, 28140296, 80890 31916, 87147 02916**


## ராதா நகர் சுரங்கப்பாதை தாமதம்: ரயில்வே பதில் அளிக்க கோர்ட் உத்தரவு



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2,3 குடியிருப்போர் நல சங்கங்களின் இணைப்பு மையம் தலைவர் ஸ்ரீதர் செயலாளர் முருகையன் பேட்டி அளித்த போது எடுத்த படம்

குரோம்பேட்டை ராதா நகர் சுரங்கப்பாதை 20 வருடமாக தாமதமாய் வருகிறது .இது தொடர்பான வழக்கில் ரயில்வே துறையினர் பதிலளிக்க கோர்ட் உத்தரவிட்டுள்ளது

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2,3 குடியிருப்போர் நலச் சங்கங்களின் இணைப்புமையம் சார்பில் சுமார் 15 வருடங்களாகியும் முடிவு பெறாத ராதாநகர் சுரங்கப்பாதை பணி குறிப்பாக சுரங்கப்பாதையிலிருந்து ரயில் நடைமேடைக்கு செல்ல படிக்கட்டுக்கள் அமைக்க, எஸ்கலேட்டர் அமைக்க வலியுறுத்தி அனைத்து மட்டத்திலும் பல்வேறு முயற்சிகள் எடுத்தும் பயன் இல்லாத நிலையில் இணைப்புமையம் சார்பில் அதன் செயலாளர் முருகையன் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்(28123/2025). அந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேசன் அவர்களிடம் வந்தது. இந்த வழக்கு குறித்தும், அதன் முக்கியத்துவம் குறித்தும் வழக்கறிஞர் திருமதி. எஸ்.வர்ஷாவின் வாதங்களைக் கேட்ட பிறகு, 30.07.2025 அன்று, ரிட் மனுவில் எழுப்பப்பட்ட பிரச்சினை முக்கியமானது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. எனவே, ரயில்வே மற்றும் நெடுஞ்சாலைத்துறை குரோம்பேட்டை ரயில் நிலையத்தின் 2 மற்றும் 3 நடைமேடைகளுடன் LC 27 சுரங்கப்பாதையை இணைக்கும் படிக்கட்டுக்களை கட்டுவதில் ஏற்பட்ட தேவையற்ற தாமதம் மற்றும் முழுமையான புறக்கணிப்பைக் குறிப்பிட்டது. சுரங்கப்பாதையிலிருந்து நடைமேடைக்கு படிக்கட்டுக்கள் அமைப்பது திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாகும், இது இல்லாமல் பயணிகள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைக்கும் நோக்கம் நிறைவேறாது. நடை பாதை அமைப்பது திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேரில் மற்றும் எழுத்துப்பூர்வமாக பல கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், அதை அமைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, LC 27 ஐ தினமும் பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான பயணிகள் இதன் சுமையை எதிர்கொள்கின்றனர் என்பதையும் மறந்துவிடக் கூடாது. உண்மையில், திரிசூலம் மற்றும் மீனம்பாக்கம் போன்ற பிற ரயில் நிலையங்களில் குரோம்பேட்டையை விட மிகக் குறைந்த மக்கள் பயன்படுத்தும் இடங்களில் படிக்கட்டு வசதிகள் இருக்கும்போது, ராதாநகர் சுரங்கப்பாதையில் அமைப்பதில் என்ன சிரமம் என்று புரியவில்லை. இதில் எடுக்கப்பட்ட/எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் குறித்து 18.8.2025 அன்று ரயில்வே மற்றும் நெடுஞ்சாலை துறை அறிக்கை/பதில் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. நல்லதே நடக்கும் என செயலாளர் முருகையன். தெரிவித்தார்.




குரோம்பேட்டை காந்திஜி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆடி மூன்றாவது வார வெள்ளி முன்னிட்டு அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்த போது எடுத்த படம்

## டிஜிட்டல் பணபரிவர்த்தனை: புதிய கட்டுப்பாடுகள் அமல்

ஆகஸ்ட் 1 முதல், சர்வர் சுமையை குறைக்கவும், யுபிஐ சேவையின் வேகத்தை மேம்படுத்தவும் கூகுள் பே (Google Pay), போன்பே (PhonePe) மற்றும் பேடிஎம் (Paytm) போன்ற யுபிஐ ஆப்களில் என்பிசிஐ (NPCI) ஆனது புதிய பயன்பாட்டு வரம்புகளை அமலுக்கு கொண்டுவருகிறது. அதன்படி பேங்க் பேலன்ஸ் சரிபார்ப்புகள் ஒரு நாளைக்கு 50 முறை மட்டுமே பயன்படுத்த முடியும். மொபைல் நம்பர் இதன் இணைக்கப்பட்ட அக்கவுண்ட் சரிபார்ப்புகள் ஒரு நாளைக்கு 25 முறை மட்டுமே பயன்படுத்த முடியும். ஆட்டோபே வழியிலான பணம் செலுத்தும் பரிவர்த்தனைகள் 3 நிலையான நேர இடைவெளிகளில் மட்டுமே அனுமதிக்கப்படும். தோல்வியுற்ற பரிவர்த்தனை நிலையை ஒரு நாளைக்கு 3 முறை மட்டுமே பார்க்க முடியும்.

## என்னை வேவு பார்த்த அன்புமணி ராமதாஸ்

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த ராமதாஸ் கூறியது: “உலகத்திலேயே தந்தையை வேவு பார்த்த பிள்ளை இருக்கிறாரா என்றால், இருக்கிறார். என்னை அதுபோல் வேவு பார்த்திருக்கிறார்கள். இது குறித்து காவல் துறையிடமும், சைபர் குற்றப்பிரிவு போலீஸாரிடமும் புகார் கொடுத்துள்ளோம். அந்தக் கருவியையும் காவல் துறையிடம் ஒப்படைத்துள்ளோம். மேலும், நான் தனியாக தனியார் சிறப்பு அமைப்பு மூலமாகவும் விசாரணை நடத்தச் சொல்லியுள்ளேன். அவர்களும் விரைவில் அறிக்கை கொடுப்பார்கள் என்றார்



குரோம்பேட்டை பாரதிபுரம் நெமிலிச்சேரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஆடி மூன்றாவது வார வெள்ளி முன்னிட்டு அம்பாள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்த போது எடுத்த படம்

## பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு ஆயுள் தண்டனை

பாலியல் வழக்கில் குற்றவாளி என தீர்ப்பு அளிக்கப்பட்ட பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு ஆயுள் தண்டனையுடன் ரூ.10 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் தேவகவுடா பேரன் பிரஜ்வல் ரேவண்ணா குற்றவாளி என எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் நேற்று தீர்ப்பு அளித்தது. தனது வீட்டில் பணியாற்றிய பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் பிரஜ்வல் கைது செய்யப்பட்டார்.

ஹசன் தொகுதி எம்.பி.யாக இருந்தபோது பல பெண்களை வன்கொடுமை செய்து வீடியோ எடுத்ததும் அம்பலமானது

## சிரிப்பு நடிகர் மதன் பாபு மரணம்

பிரபல நகைச்சுவை நடிகர் மதன் பாபு மரணம் அடைந்தார் அவர் நடிக்கும் இடங்களில் வித்தியாசமாக சிரித்து ரசிகர்களை கவர்ந்தவர்.











Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725